# SCHEME OF WORK – 2019 GRADE - 09 SUBJECT – TAMIL LANGUAGE

## FIRST TERM - 2019.01.02 – 2019.04.05

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளை | குணநலன் உள்ளீடு | பாடப்புறச் செயற்பாடு | திகதி | முடிக்-கும் திகதி | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2.0<br>சந்தர்ப்பத்துக்கும் சூழ்நிலைக்கும் ஏற்ற வகையில் உரையாடுவார். | 2.1<br>தமது உணர்வுகளும் எண்ணங்களும் தெளிவாகப் புலப்படும் வகையில் உரையாடுவார். | நல்லெண்-ணங்களைத் தேர்ந்து எடுங்கள் | • கட்டுரையின் பிரதான கருத்து துனைக்கருத்துக்களைக் கூறுவார்.<br><br>• வாசித்து கிரகித்த தகவல்களைத் தமது மொழி நடையில் தெளிவாக உரைப்பார்.<br><br>• வாசித்து கிரகித்த விடயங்களை ஒப்பிட்டும் தொகுத்தும் தம் அபிப்பிராயங்களைத் தெரிவிப்பார்.<br><br>• நல்லெண்ணங்களை மனதில் வளர்க்க வேண்டிய அவசியத்தைக் கூறுவார். | 03 | கட்டுரை பற்றிய சுருக்க் குறிப்புகள்<br><br>நல்ல எண்ணம் வெளிப் படுத்தும் கூற்றுகள் | மேம்பட்ட எண்ணங்க ளையுடைய வாழ்வில் வெற்றி பெற்ற ஆளுமை-கள் பற்றிய தகவல்-களை வகுப்பு அறையில் காட்சிப்படு-த்துவார். | | | |
| 4.0<br>தமது எண்ணங்களை, கேட்போர் உளங்கொளத்தக்க வகையில் எடுத்துரைப்பார். | 4.1<br>ஆக்கத்திறன் வெளிப்படும் விதத்தில் தெளிவாகப் பேசுவார். | உண்மைக்குப் பரிசு | • குறிப்பிட்ட பாடப் பகுதியை வாசித்துக் கிரகித்துக கூறுவார்.<br><br>• ''உண்மைக்குப் பரிசு'' எனும் பாடப் பகுதியை குறுநாடகமாக்கி மெய்ப்பாடுகள் வெளிப்பட நடிப்பார்.<br><br>• பாடப்பகுதியினூடாக வெளிப்படும் விழுமியக் கருத்துக்களை இனங்கண்டு எடுத்துரைப்பார்.<br><br>• சிறந்தபண்புகளுடன் நேர்மையாக வாழ்பவன் மேண்மை பெறுவான் என்பதை சிளங்கிக் கூறுவார். | 03 | நல்வாழ்வு பற்றிய விழுமியப் பண்புகள் சில | இக் கதையை நாடகமாக நடித்துக் காட்டுவார். | | | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 3.0<br>பல்வேறு பாத்திரங்களை ஏற்று அவற்றின் இயல்புகளையும் உணர்ச்சிகளையும் வெளிப்படுத்திப் பேசுவார். | 3.2<br>பாவனை செய்து பேசுவார். | ஒரு சின்னஞ் சிறு பூச்சி | • குறிப்பிட்ட பாடப் பகுதியை மௌனமாக வாசித்துக் கூறுவார்.<br><br>• ஒரு ஒரு சின்னஞ் சிறு பூச்சி எனத் தன்னை பாவனை செய்து, சிறுவன் தனக்கு செய்யும் கொடுமைகளைப் பற்றி எடுத்துக் கூறுவார்.<br><br>• தனது மகனுக்கு படிப்பினைக் கூறும் தந்தையாகத் தன்னை பாவனை செய்து, பேசுவார்.<br><br>• பாடப் பரப்பின் மையக்கருத்தை விழுமியக் கூற்றாக வெளிப்படுத்திப் பேசுவார்.<br><br>• பாவனை செய்து பேசும் போது கூற எடுத்துக்கொண்ட விடயம், சபையோரை விளித்தல், மொழிப்பிரயோகம், உச்சரிப்பு, தொனிவேறுபாடு, மெய்ப்பாடு தோன்றப் பேசுவார். | 03 | கதைச் சுருக்கம் | பூச்சியே வெற்றி பெற்றது எனும் தந்தையின் கருத்தை ஆதாரம் காட்டி கட்டுரை எழுதி வகுப்பில் காட்சிப்-படுத்துவார். | | | |
| 10.0<br>எழுத்தாக்க நுட்பங்களைப் பயன்படுத்தி, வழுவின்றி எழுதுவார். | 10.1<br>வழுக்களின்றி வாக்கிய அமைதியோடு எழுதுவார். | வாக்கியம் அமைத்தில். | • எழுவாய் பயனிலையை திணை, பால், எண், இடம், காலம் என்பவற்றிற்கேற்ப இயைபுறுமாறு வாக்கியங்களை எழுதுவார்.<br><br>• பொருள் மயக்கம் அற்ற வகையில் வாக்கியங்களை எழுதுவார்.<br><br>• வழுவற்ற வகையில் மொழியைக் கையாள வேண்டியதன் அவசியத்தை விளக்கி வாக்கியம் எழுதுவார். | 04 | செயற் பாட்டு பத்திரம்<br><br>வாக்கிய அட்டைகள் | | | | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 13.0<br>மொழியின் இலக்கணத்தை அறிந்து, அதற்கமைய மொழியைச் செம்மையாகக் கையாள்வார். | 13.3<br>சொற்றொடர், வாக்கியம் என்பவற்றின் வகையையும், அவற்றின் இயல்பையும் அறிந்து பிரயோகிப்பார். | வாக்கிய உறுப்புகள்<br><br>எழுவாய்,<br><br>செயப்படு பொருள்,<br><br>பயனிலை | •வாக்கிய உறுப்புக்களாக எழுவாய், செயப்படுபொருள், பயனிலை என்பன விளங்குவதை எடுத்துக் கூறுவார்.<br><br>• வாக்கியத்தில் கருத்து முற்று பெற்று நிற்கும் சொல் பயனிலை என்பதை விளக்குவார்.<br><br>• எழுவாயை இணங்காண கேட்கப்படும் வினாக்களைக் (யார், எது, என்ன ) கூறுவார்.<br><br>• செயப்படுபொருளைக் கண்டு பிடிக்கும் வழிமுறையை எடுத்துக் கூறுவார். | 03 | வசனங்கள் எழுதிய டிமைன் தாள்<br><br>செயற் பாட்டுப் பத்திரம் | | | | |
| 8.0<br>அவதானமாகக் கிரகித்து , எழுத்துப் பொறிமுறைகளை அனுசரிதது் இலக்கண வழுவின்றி, உரிய நிறுத்தக் குறிகளுடன் ஆக்கங்களைத் தெளிவாக எழுதுவார். | 8.2<br>அவதானித்துக் கேட்டுக் கிரகித்தவற்றை வழுவின்றி எழுதுவார். | பழமொழிகள் | • வழக்கிலுள்ள பழமொழிகளை அறிந்து, வழுவின்றி எழுதுவார்.<br><br>• பழமொழிகளின் பொருளை அறிந்து கூறுவார்.<br><br>• பழமொழிகளை பொருத்தமாக பயன்படுத்தி, ஆக்கங்களை வழுவின்றி எழுதுவார். | 02 | பழமொழி எழுதப்பட்ட அட்டைகள்<br><br>அகராதி<br><br>பழமொழி நானூறு | | | | |
| 1.0<br>பல்வேறு நோக்கங்களுக்கும் சந்தர்ப்பங்களுக்கும் ஏற்ப வினைத்திறனுடன் கேட்டுக் கிரகித்துத் துலங்குவார். | 1.2<br>பாடலை செய்யுளைப் பொருளுணர்ந்து சொல்லுவார். ஓதுவார். | இதயம் அழுகிறது | • கவிதையை தெளிவாக உச்சரித்து வாசிப்பார்.<br><br>• கவிதையை சந்திபிரித்துப் பொருள் விளங்கி வாசிப்பார்.<br><br>• நிறுத்தக்குறிகளை அனுசரித்து வாசித்துக் கிரகித்துத் துலுங்குவார்.<br><br>• கவிஞர் கூறவந்த விடயத்தினை எடுத்துரைப்பார். | 04 | | நல்லாசி-ரியர் நன்மாணா-க்கர் குறித்து தமது எண்ணம் புலப்படும் வகையில் கட்டுரை எழுதி காட்டுவார். | | | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 13.0 மொழியின் இலக்கணத்தை அறிந்து அதற்கு அமைய மொழியைச் செம்மையாகக் கையாள்வார். | 13.2 சொற்களின் வகையையும் இயல்பையும் அறிந்து அவற்றைப் பிரயோகிப்பார். | வினைச்சொல் | • வினைச்சொல் என்றால் என்ன என்று அறிந்துக் கூறுவார்.<br>• வினைச்சொற்களை இனங்கண்டு வேறுபடுத்துவார்.<br>• வினைச்சொற்களுக்கு உதாரணம் தந்து எழுதுவார்.<br>• வினையடியிலிருந்து மூன்று காலத்திற்குமுரிய சொல் பிறக்கு- மாற்றை அட்டவனைப்படுத்துவார்.<br>• வினைச் சொற்களை பொருள் அடிப்படையில் வகைப்படுத்தி எழுதுவார். | 05 | வினைச் சொற்கள் எழுதப்பட்ட சொல் அட்டைகள் | | | | |
| 3.0 பல்வேறு பாத்திரங்களை ஏற்று, அவற்றின் இயல்புகளையும் உணர்ச்சிகளையும் வெளிப்படுத்திப் பேசுவார். | 3.1 பாத்திரங்களின் இயல்புகளுக்கு ஏற்ப நடித்துப் பேசுவார். | மருமகனுக்கு விருந்து | • பாடத்திலுள்ள பாத்திரங்களின் உணர்வுகளை வெளிக்கொணரும் வகையில், உச்சரிப்புத் தெளிவுடன் உரையாடுவார்.<br>• பொருத்தமான தொனி, முகபாவம், அங்க அசைவுகளுடன் உரையாடி நடித்துக் காட்டுவார்.<br>• ஏனையோருடன் ஒத்திசைவாக சேர்ந்து நடிப்பார்.<br>• நாடகத்தின் கருப்பொருள் வெளிப்படும் வகையில் இயல்பாக நடிப்பார். | 03 | முக்கிய கருத்துகள் எழுதப்பட்ட டிமைன் தாள் | இவை போன்ற நாட்டார் கதைகள் பலவற்றை கேட்டறிந்து எழுத்தாக்-கம் செய்து வகுப்பில் காட்சிப்படு-த்துவார். | | | |
| 13.0 மொழியின் இலக்கணத்தை அறிந்து அதற்கு அமைய மொழியைச் செம்மையாகக் கையாள்வார். | 13.2 சொற்களின் வகையையும் இயல்பையும் அறிந்து அவற்றைப் பிரயோகிப்பார். | சொற்புணர்ச்சி | • சொற்கள் புணரும் முறைகளை அறிந்து பிரயோகிப்பார்.<br>• சொற்களின் வகைகளை அறிந்து விளக்கிக் கூறுவார்.<br>• பொருத்தமான முறையில் சொற்களைப் புணர்த்தி எழுதுவார்.<br>• பொருத்தமான முறையில் சொற்களைப் பிரித்து எழுதுவார். | 04 | புணர்ச்சி விதியை விளக்கும் உதாரணம் கொண்ட செயற்பாட்டு பத்திரம் விடய விளக்க அட்டவணை | | | | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2.0<br>சந்தர்ப்பத்துக்கும் சூழ்நிலைக்கும் ஏற்ற வகையில் உரையாடுவார். | 2.1<br>தமது உணர்வுகளும் எண்ணங்களும் தெளிவாகப் புலப்படும் வகையில் உரையாடுவார். | யார் சிறந்தவர்? | • உரையாடல் அமைப்பினை விளங்கிக்கொண்டு, அதற்கேற்ற வகையில் உரையாடுவார்.<br><br>• பாடத்தில் வெளிப்படுத்த விழைந்த விடயத்தினை இனங்கண்டு வெளிப்படுத்துவார்.<br><br>• உணர்வுகள் வெளிப்படுமாறு தொனிபேதத்துடன் உரையாடுவார்.<br><br>• பாடத்தில் வெளிப்படுத்தப்படும் விழுமியக்கருத்துக்களை அறிந்து கூறுவார்.<br><br>• ஒவ்வொருவரிடமும் தனித்துவமான பண்புகள் காணப்படுகின்றமையை உணர்ந்துக் சுறுவார். | 04 | விழுமியக் கருத்துக்கள் அடங்கிய டிமைன் தாள் | இக் கதையை நாடகமாக நடித்து மேடை ஏற்றுவார். | | | |
| 11.0<br>படைப்புக்களை வாசித்த அனுபவங்களின் ஊடாக படைப்பாக்க நுட்பங்களை அறிந்து ஆக்கங்களைச் சுயமாக எழுதுவார். | 11.2<br>நடைமுறைத் தேவைகளுக்காக எழுதுவார். | அறிக்கை அழைப்பிதல் | • அறிக்கை அமைய வேண்டிய முறை பற்றி கூறுவார்.<br><br>• அறிக்கை யாரால், எது தொடர்பாக எழுதப்பட்டுள்ளது என விளக்குவார்.<br><br>• அறிக்கை அமைப்பு, உள்ளடக்கம் என்பன பொருத்தமுற அமைய எழுதுவார்.<br><br>• தலைப்புக்கு கேட்கப்பட்ட விடயத்துக்கு பொருத்தமாக அழைப்பிதழ் எழுதுவார்.<br><br>• விடய உள்ளடக்கத்தைத் தெளிவானதாகவும் தொடர்ச்சியாகவும் நேர்த்தியாகவும் எழுதுவார்.<br><br>• இலக்கண வழுவின்றியும் பண்புடனும் எழுதி முன் வைப்பார். | 02 | மாதிரி அழைப்பிதல்<br><br>மாதிரி அறிக்கை | | | | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7.0 இரசனைக்காகவும் ஆக்கத்திறனை மேம்படுத்தும் வகையிலும் வாசிப்பார். | 7.1 படைப்புக்களை வாசித்து நயப்பார். | மலை நாட்டுப் பிரயாணம். | • பரடப்பகுதியினை இரசனையோடு வாசிப்பார்.<br>• கட்டுரை ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ள அனுபவங்களை உள்வாங்கி வாசிப்பார்.<br>• இயற்கை வருணிக்கப்பட்டிருக்கும் பாங்கினை நயந்து வாசிப்பார்.<br>• பிரயாணங்களை மேற்கொள்வதற்கான விருப்பினை வெளிப்படுத்தி வாசிப்பார். | 02 | மலை நாட்டு காட்சிப் படங்கள்<br>மலையக பிரதேச வழக்குச் சொற்கள் | தமது பயண அனுபவங்-களை இரசனை-யோடு எழுதி காட்டுவார். | | | |
| 12.0 சொற் களஞ்சியத்தை விருத்திசெய்து, பொருத்தமான வகையில் பிரயோகிப்பார். | 12.1 சொற்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து, செம்மையாகப் பிரயோகிப்பார். | ஒரு சொல் பல பொருள்<br>பல சொல் ஒரு பொருள்<br>ஒத்த கருத்துச் சொல்<br>எதிர் கருத்துச் சொல் | • சொற்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து பிரயோகித்- துக் கூறுவார்.<br>• சொற்களின் எதிர்கருத்துடைய சொற்களை அறிந்து எழுதுவார்.<br>• தமது சொற் களஞ்சியத்தை விருத்தி செய்து, மொழியைப் பொருத்தமாகக் கையாண்டு எழுதுவார். | 02 | அகராதி<br>செயற்பாட்டுப் பத்திரம்<br>விடய விளக்க அட்டவணை | | | | |
| 7.0 இரசனைக்காகவும் ஆக்கத்திறனை மேம்படுத்தும் வகையிலும் வாசிப்பார். | 7.1 படைப்புக்களை வாசித்து நயப்பார். | இனியவை கூறல் | • குறட்பாக்களைச் ஓசை இசைபுடன் வாசிப்பார்.<br>• குறட்பாக்களைச் சந்திப்பிரித்து வாசிப்பார்.<br>• குறட்பாக்களைக் கொண்டு கூட்டி கூறுவார்.<br>• குறட்பாக்களின் பொருளினை அறிந்து முன்வைப்பார்.<br>• குறட்பாக்களை பொருளுக்கேற்ப வகுத்தும் தொகுத்தும் கூறுவார்.<br>• அணிமுதலிய சிறப்புக்களை வேறுபடுத்தி கூறுவார். | 02 | குறள் எழுதப்பட்ட அட்டை<br>குறள் பாடப்பட்ட இறுவட்டு<br>அருஞ்சொல் எழுதப்பட்ட அட்டவணை | நட்பை வளர்க்கும் இன் சொல்லும் பகையைத் தூண்டும் வன் சொல்லும் எனும் தலைப்பில் மேடைப் பேச்சு ஒன்றை எழுதுவார். | | | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 4.0<br>தமது எண்ணங்களை, கேட்போர் உளங்கொளத்தக்க வகையில் எடுத்துரைப்பார். | 4.2<br>எடுத்துக்கொண்ட விடயத்துக்குப் பொருத்தமாகப் பொருட் செறிவோடு பேச்சு நுட்பங்களைக் கையாண்டு பேசுவார். | பேச்சு | • பொருத்தமான தலைப்பினைத் தமக்குள் கலந்துரையாடித் தெரிவு செய்து கூறுவார்.<br><br>• தலைப்புக்கு ஏற்ற வண்ணம் பேச்சுக்கான சட்டகத்தினை எழுதுவார்.<br><br>• தலைப்புக்கு ஏற்ற விடயங்கள், தரவுகள், உதாரணங்கள் என்பனவற்றைத் தேடி எழுதுவார்.<br><br>• தேடியவற்றைத் தொகுத்து சபைக்கு ஏற்றவாறு பொருள் மாறுபடாமல் பேசுவார்.<br><br>• பேச்சு நுட்பங்களைக் கையாண்டு முகபாவம், தொனி, நேரக்கட்டுப்பாடு போன்றவற்றைக் கருத்திலே கொண்டு பேசுவார்.<br><br>• முக்கியமான கருத்துக்களுக்கு அழுத்தம் கொடுத்து, தர்க்கித்து பேசுவார்.<br><br>• பழமொழிகள், உதாரணங்கள், உவமைகள் என்பனவற்றைக் கையாண்டு பேசுவார்.<br><br>• தமது எண்ணங்களையும் கருத்துக்களையும் பிறர் மனதிலே பதியும் வண்ணம் குறித்த நேரத்துக்குள் பேசுவார். | 03 | மாதிரிப் பேச்சு அடங்கிய ஒலிப்பதிவு நாடா<br><br>பேச்சுக்கான சட்டகம் எழுதிய டிமைன் தாள் | | | | |
| 12.0<br>சொற் களஞ்சியத்தை விருத்தி செய்து பொருத்தமான வகையில் பிரயோகிப்பார். | 12.2<br>சொற்றொடரின் பொருளையும் வகையையும் அறிந்து செம்மையாகப் பிரயோகிப்பார். | இரட்டைக் கிளவி | • இரட்டைக் கிளவி என்பதன் பொருளையும் இயல்பையும் அறிந்து கூறுவார்.<br><br>• வாக்கியங்களில் இடம்பெறும் இரட்டைக்-கிளவிகளை இனங்கண்டு கூறுவார்.<br><br>• இரட்டைக்கிளவிகளைப் பொருள் அறிந்து தமது ஆக்கங்களில் கையாள்வார்.<br><br>• வாக்கியங்களில் பொருத்தமான இடங்களில் இரட்டைக்கிளவிகளை அமைத்து எழுதுவார். | 02 | இரட்டைக் கிளவிகளை உள்ளடக்கிய பந்திகள், பாடல்கள்<br><br>செயற்பாட்டு பத்திரம் | | | | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1.0<br>பல்வேறு நோக்கங்களுக்கும் சந்தர்ப்பங்களுக்கும் ஏற்ப வினைத்திறனுடன் கேட்டுக்கிரகித்துத் துலங்குவார். | 1.1<br>எழுத்துக்களின் ஒலி வேறுபாடுகளுக்கு ஏற்ப , சொற்களைச் செம்மையாக உச்சரிப்பார். | ஒலிபேதச் சொற்கள் | • ஒலி பேதங்களை கருத்தில் கொண்டு அவ்வாறான எழுத்துக்களைச் சரியாக உச்சரித்துக் கூறுவார்.<br><br>• லகரம், ளகரம், ழகரம் முதலான எழுத்துக்களின் ஒலி வேறுபாடுகளை அறிந்து சொற்களை உச்சரித்து வாசிப்பார்.<br><br>• லகரம், ளகரம், ழகரம் முதலான எழுத்துக்கள் பொருள் வேறுபாடு தரும் என அறிந்து பொருத்தமாகச் சொற்களைப் பயன்படுத்துவார்.<br><br>• ஒலி பேதச் சொற்களின் ஒலி பிறக்கும் இடத்தை வேறுபடுத்தி அறிந்து சரியாக உச்சரிப்பார். | 02 | சொல் அட்டை<br><br>ஒலிப்பதிவு நாடா | | | | |

# 2nd TERM - 2019.04.22 – 2019.08.01

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளை | குணநலன் உள்ளீடு | பாடப்புறச் செயற்பாடு | திகதி | முடிக்கும் திகதி | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 6.0 : கிரகித்துப் பொருள் உணர்ந்து வாசிப்பார். | 6.1 : மௌனமாக வாசித்து கிரகித்துத் துலங்குவார். | கட்டுரை 'வியக்கும் மனம் வேண்டும்' | ▪ கட்டுரையை பொருள் உணர்ந்து வாசிப்பார்.<br>▪ இயற்கையை கிரகிக்க வேண்டிய தன் அவசியத்தை எடுத்துக் கூறுவார்.<br>▪ தன் கருத்துக்களை முன் வைப்பதில் கட்டுரையாசிரியர் கைக்கொள்ளும் உத்திகளை இனங்கண்டு வாசித்து துலங்குவார்.<br>▪ கட்டுரையாசிரியரின் மொழிநடை பற்றி கருத்துரைப்பார்.<br>▪ தாம் நயந்த பகுதிகளையும் காரணங்களையும் முன்வைப்பார். | 03 | கட்டுரையில் நயந்த பகுதி<br><br>பாரதியின் வெண்ணிலா பாடல் | செயற்கை-யான வளர்ச்சிகள் ஏற்படுத்தி-யிருக்கும் நன்மைகள், தீமைகள் என்பன குறித்து விவாதம் ஒன்றில் ஈடுபடுவார். | | | |
| 13.0 : மொழியின் இலக்கணத்தை அறிந்து, அதற்கமைய மொழியைச் செம்மையாக கையாள்வார். | 13.1 : எழுத்துக்களின் ஒலிப்பு முறைகளையும் வகை தொகையையும் அறிந்து பயன்படுத்துவார் | எழுத்துக்களின் வகை தொகை | ▪ தமிழ் உயிர் எழுத்துக்களில் குறில் நெடில் என வேறுபடுவதைக் கூறுவார்.<br>▪ மெய்யெழுத்துக்களை ஒலிப்பின் அடிப்படையில் வேறுபடுத்திக் கூறுவார்.<br>▪ உயிர் மெய் எழுத்துக்கள் எவ்வாறு ஆக்கப்படும் என்பதற்கு ஆதாரம் தருவார்.<br>▪ தமிழ் எழுத்துக்களின் வகையை-யும் தொகையையும் வகைப்படுத்தி எழுதுவார்.<br>▪ தமிழ் எழுத்துக்கள் 247 என்பதனையும் அவை தமிழ் நெடுங்கணக்கு என அழைக்கப்படுவதனையும் உதாரணத்துடன் விளக்குவார். | 02 | தமிழ் எழுத்துக்க-ளின் வகை தொகை கொண்ட அட்டவணை-கள்<br><br>ஒலி பிறப்புப் பற்றிய விளக்கக் குறிப்பு | | | | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1.0 : பல்வேறு நோக்கங்களுக்கும் சந்தர்ப்பங்களுக்கும் ஏற்ப வினைத்திறனுடன் கேட்டுக் கிரகித்துத் துலங்குவார். | 1.4 : செயற்திறனும் வினைத்தினும் உள்ள கேட்போராகச் செயற்படுவார். | கவிதை<br>'செய்யும் தொழிலே தெய்வம்' | ▪ கவிதையை கிரகித்து பொருளை விளங்கி உரியவாறு படிப்பார்.<br>▪ கவிதையின் மையக்கருத்தையும் துணைக்கருத்தையும் கூறுவார்.<br>▪ செய்யும் தொழிலை தெய்வமாக மதித்தல் வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்துவார்.<br>▪ கொண்ட கடமைதான் நமக்குப் பதவி என்பதனூடாகப் 'பதவி' பற்றிய தமது கருத்துக்களை எடுத்து-ரைப்பார்.<br>▪ வாழ்க்கையை வளப்படுத்த உதவும் பாடல் வரியைக் குறிப்பிடுவார்.<br>▪ இக் கவிதை ஊடாகக் கவிஞர் பற்றியும் கவிதை நயம் பற்றியும் தம் கருத்துக்களை முன்வைப்பார்.<br>▪ கவிதையில் இடம்பெறும் விழுமிய கருத்துக்கள் வாழ்க்கையை வளப்-படுத்துவதை விளக்குவார். | 04 | பாரதிதாசன் தொழில் கவிதை<br>பாடல் பாடிய இறுவட்டு | இசையுடன் இப் பாடலைப் பாடி, அபிநய நடிப்பினை வெளிப்-படுத்தும் அரங்காற்-றுகை ஒன்றை நிகழ்த்-துவார். | | | |
| 13.0 : மொழியின் இலக்கணத்தை அறிந்து, அதற்கமைய மொழியைச் செம்மையாக கையாள்வார். | 13.1 : எழுத்துக்களின் ஒலிப்பு முறைகளையும் வகை தொகையையும் அறிந்து பயன்படுத்துவார் | எழுத்துக்கள் | ▪ உயிர் எழுத்துக்களில் குறில் நெடில்களை வேறுபடுத்தி, அவ்வெ-ழுத்துக்கள் இடம்பெறும் சொற்களை செம்மையாகக் கையாள்வார்.<br>▪ தமிழ் எழுத்துக்களில் ஒலிப்பில் மயக்கத்தை ஏற்படுத்தும் எழுத்துக்-களை இனங்கண்டு கூறுவார்.<br>▪ அத்தகைய எழுத்துக்களின் பிறப்பிடங்களையும் ஒலிப்பிடங்களை-யும் அறிந்து கையாள்வார்.<br>▪ எழுத்துக்களில் ல, ள, ழ, ண, ந, ன, ர, ற என்பவற்றை செம்மையாக உச்சரித்துக் காட்டுவார். | 02 | ஒலிப்பில் மயக்கம் விளை-விக்கும் எழுத்துக்கள் அடங்கிய சொல் அட்டைகள்<br>ஒலி வேறுபாட்டை புலப்படுத்தும் பாடல் | | | | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 10.0 : எழுத்தாக்க நுட்பங்களைப் பயன்படுத்தி வழுவின்றி எழுதுவார். | 10.2 : கருத்துப் புலப்படுமாறு பந்தி எழுதுவார். | பந்தி அமைத்தல் | ▪ பந்தி அமைக்கும்போது அவதா-னிக்க வேண்டிய விடயங்களைப் பட்டியற் படுத்திக் கூறுவார்.<br><br>▪ கொடுத்த பந்தியினது மையப் பொருளை அனங்கண்டு எழுதுவார்.<br><br>▪ துணைக்கருத்துக்களை வேறு-படுத்திக் கூறுவார்.<br><br>▪ மேற்கோள், விடய விளக்கம் என்பனவற்றை குறிப்பிட்டுக் கூறுவார்.<br><br>▪ வாக்கிய இயைபுடனும் கருத்துத் தொடர்புடனும் பந்தி ஒன்றை எழுதுவார்.<br><br>▪ கொடுக்கப்பட்ட தலைப்பில் பொருத்தமாக பந்தியை ஆக்கி எழுதுவார். | 02 | பந்தி அமைக்கும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள் பற்றிய குறிப்பு<br><br>வாக்கிய இயைபுடன் கூடிய மாதிரிப்பந்தி (பிரதி) | | | | |
| 11.0 : படைப்புக்களை வாசித்த அனுபவங்கள் ஊடாக, படைப்பாக்க நுட்பங்களைப் பயன்படுத்தி, ஆக்கங்களைச் சுயமாக எழுதுவார். | 11.1 : பல்வேறு ஆக்கங்களை எழுதுவார். | பாடல்கள்/ கவிதைகள் எழுதுதல் | ▪ பாடல்கள் சிலவற்றை எடுத்துக் காட்டாகக் கூறி கேட்கும் வினாக்களுக்கு விடை கூறுவார்.<br><br>▪ பாடல்களின் மையப்பொருள், பெறப்படும் படிப்பினைகள், சொல்லாட்சி, அணிகள் பற்றி எடுத்துக் கூறுவார்.<br><br>▪ கற்பனை வளமிக்க கவிதைகளை ஆதாரம் காட்டி கூறுவார்.<br><br>▪ தனது மனதைத் தொட்ட பகுதியைக் கூறி விளக்கம் தருவார்.<br><br>▪ அனுபவங்களை ஆதாரமாகக் கொண்டு தன் உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில் கவிதை எழுதுவார். | 02 | பாடல்கள்/ கவிதைகள்<br><br>கவிதை எழுதும் போது அவதானிக்க வேண்டியவை (கரு, கற்பனை, வர்ணனை) | | | | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1.0 : பல்வேறு நோக்கங்களுக்கும் சந்தர்ப்பங்களுக்கும் ஏற்ப வினைத்திறனுடன் கேட்டுக் கிரகித்துத் துலங்குவார். | 1.3 : கேட்டுக் கிரகித்தவற்றை செம்மையாகக் கூறுவார். | கட்டுரை<br><br>செய்யுளை மனனஞ் செய்யும் வழி | ▪ கட்டுரையில் உள்ள விடயங்களை வழிகாட்டலுக்கேற்ப குறிப்பெடுப்பர்.<br><br>▪ குறிப்பெடுத்த விடயங்களுக்கு ஊடாக மையக் கருத்தைக் கூறுவார்.<br><br>▪ செய்யுளை மனனஞ் செய்வதற்காக கூறப்பட்ட வழிமுறைகளையும் அவை தொடர்பான தமது அபிப்பிராயங்களையும் தெரிவிப்பார். | 02 | மனனஞ் செய்யும் வழி முறைகள் பற்றிய அட்டவணை<br><br>நீதிப் பாடல்கள் அடங்கிய அட்டை | பாடல்களில் இடம் பெற்றுள்ள எதுகை, மோனை சொற்களை பட்டியற் படுத்தி வகுப்பில் காட்சிப் படுத்துவார் | | | |
| 12.0 : சொற் களஞ்சியத்தை விருத்தி செய்து பொருத்தமான வகையில் பிரயோகிப்பார். | 12.1 : சொற்றொடர்--களின் பொருளையும் வகையையும் அறிந்து செம்மையாகப் பிரயோகிப்பார். | அடுக்குத் தொடர் | ▪ ஒரு பாட்டுடையான் என்ற கட்டுரையை கருத்தூன்றி வாசிப்பார்.<br><br>▪ வாக்கியங்களில் இடம்பெறும் அடுக்குத் தொடர்களை இனங்கண்டு கூறுவார்.<br><br>▪ அடுக்குத் தொடர்களைப் பொருள் அறிந்து விளக்கி எழுதுவார்.<br><br>▪ வாக்கியங்களில் பொருத்தமான இடங்களில் அடுக்குத் தொடர்களைப் பயன்படுத்தி எழுதுவார். | 02 | அடுக்குத் தொடர்களை உள்ளடக்கிய பாடல், வாக்கியம், பந்தி.<br><br>அடுக்குத் தொடர்களும் அவற்றின் பொருள் புலப்படும் வாக்கியமும் | | | | |
| 5.0 : ஆக்கபூர்வமான செயற்றிறனுடைய வாசகராகச் செயற்படுவார். | 5.1 : விடயத் தெளிவோடு வாசிப்புப் பொறி முறைகளை அனுசரித்து வாசிப்பார். | எறும்புக் குடும்பம்<br><br>(மனிதன் கைவிட்ட வாழ்வியல் அமைப்பு) | ▪ கருத்தூன்றிய வாசிப்பின் மூலம் கட்டுரையின் பிரதான கருத்தையும் துணைக்கருத்துக்களையும் இனங்கண்டு முன்வைப்பார்.<br><br>▪ எறும்புகளின் வாழ்வியல் அமைப்பை வாசித்து விளக்குவார்.<br><br>▪ வாசிப்புப் பொறிமுறைகளை அனுசரித்து வாசித்துக் காட்டுவார். | 04 | எறும்பு பற்றிய வாழ்க்கை முறைப் படம்<br><br>எறும்பினிடம் மனிதன் கற்க வேண்டிய பண்புகள் பற்றிய ஒப்பீடு | சமூகமாக வாழும் ஒழுங்கு முறையை எறும்புக் கூட்டம் எவ் வகையில் கொண்டு ஒழுகுகின்றன என்பது | | | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பற்றி பேசுவார். | | | |
| 12.0 : சொற் களஞ்சியத்தை விருத்தி செய்து பொருத்தமான வகையில் பிரயோகிப்பார். | 12.1 : சொற்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து செம்மையாகப் பிரயோகிப்பார். | கலைச் சொற்கள் | ▪ கலைச் சொற்களை அறிந்துக் கூறுவாரர்.<br><br>▪ கலைச் சொற்களின் பொருளை அறிந்துக் கூறுவார்.<br><br>▪ கலைச் சொற்களைப் பல்வேறு தேவைகளுக்கும் பொருத்தமாகப் பிரயோகிப்பார். | 02 | சொல் அட்டைகள்/ அட்டவணை<br><br>பல்வேறு வகைப்பட்ட கலைச்சொல் அட்டை விஞ்ஞானம், தகவல் தொழிநுட்பம் | | | | |
| 11.0 : படைப்புக்களை வாசித்த அனுபவங்கள் ஊடாக, படைப்பாக்க நுட்பங்களைப் பயன்படுத்தி, ஆக்கங்களைச் சுயமாக எழுதுவார். | 11.1 : பல்வேறு ஆக்கங்களை எழுதுவார். | உரைச் சித்திரம் | ▪ படைப்புக்களை வாசித்து, அவற்றின் அனுபவங்களைப் பெற்றுத் துலங்குவார்.<br><br>▪ படைப்பாக்க, நுட்பங்களைப் பெற்று அவ் அனுபவங்களை ஆக்கங்களில் வெளிப்படுத்துவார்.<br><br>▪ ஆக்கங்களின் வடிவம், அமைப்பு, தலைப்பு என்பன பொருத்தமுற எழுதுவார்.<br><br>▪ உரைச் சித்திரம் ஒன்றை, தெளிவாகவும் கருத்துப் புலப்-படுமாறும் எழுதுவார்.<br><br>▪ பொருத்தமான மொழிநடையிலும் வாசிப்போருக்கு புரியும் வகையிலும் எழுதுவார். | 02 | மாதிரி உரைச் சித்திர ஒலிப்பதிவு நாடா<br><br>மாதிரி உரைச் சித்திரத்தின் பிரதி | | | | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 13.0 : மொழியின் இலக்கணத்தை அறிந்து, அதற்கமைய மொழியைச் செம்மையாக கையாள்வார். | 13.1 : சொற்களின் வகையையும் இயல்பையும் அறிந்து, அவற்றைப் பிரயோகிப்பார். | பெயர்ச்சொல் | ▪ பாடப்பரப்பில் பெயர்ச்சொற்களை இனங்கண்டு வேறுபடுத்துவார்.<br>▪ பெயர்ச்சொற்களின் வகைகள் பற்றி விளக்கி உதாரணம் தருவார்.<br>▪ பெயர்ச்சொற்களைப் பொருத்தமாக கையாண்டு வாக்கியம் எழுதுவார்.<br>▪ வாக்கிய ஆக்கத்தில் பெயர்ச் சொல் தரும முக்கியத்துவத்தை உதாரணத்துடன் விளக்குவார். | 04 | பெயர்ச்சொல் பற்றிய விளக்க அட்டவணை<br>பல்வேறு வகையான பெயர்ச் சொற்களை கையாண்டு அமைத்த வாக்கியம். | | | | |
| 6.0 : கிரகித்துப் பொருள் உணர்ந்து வாசிப்பார். | 6.1 : பல்வேறு நோக்கங்க--ளுக்காக வாசிப்பார். | தந்தை மகனுக்கு எழுதிய புகழ் பெற்ற கடிதம் | ▪ கடிதத்தை கிரகித்துப் பொருள் விளங்கி வாசிப்பார்.<br>▪ கிரகித்த விடயங்களைப் பட்டியற் படுத்தி உரத்து வாசிப்பார்.<br>▪ உறவு முறைக் கடிதம் எழுதும் அமைப்பை அறிந்துக் கூறுவார்.<br>▪ கடிதத்தில் அறிவுரை சார்ந்த விடயங்களை முன்வைக்க முடியும் என்பதை விளக்குவார்.<br>▪ கடிதத்தில் இடம்பெற வேண்டிய விடயங்கள் தொடர்பான தனது கருத்துக்களை முன்வைத்துக் கடிதம் எழுதுவார். | 02 | இலக்கியத் தரம் வாய்ந்த கடிதங்கள்<br>மாதிரிக் கடித தளக் கோலம் பற்றிய விளக்கம் உள்ள டிமைன் தாள் | புகழ் பெற்றவர்--களது முக்கியத் துவமிக்க கடிதங்கள் சிலவற்றை வகுப்பில் காட்சிப் படுத்துவார் | | | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 11.0 : படைப்புக்களை வாசித்த அனுபவங்கள் ஊடாக, படைப்பாக்க நுட்பங்களைப் பயன்படுத்தி, ஆக்கங்களைச் சுயமாக எழுதுவார். | 11.2 : நடைமுறைத் தேவைகளு-க்காக எழுதுவார். | உறவுமுறைக் கடிதம் | ▪ கடித அமைப்பு பொருத்தமாக இருக்குமாறு எழுதுவார்.<br>▪ தலைப்புக்கு கேட்கப்பட்ட விடயத்-துக்குப் பொருத்தமாக எழுதுவார்.<br>▪ விடய உள்ளடக்கத்தை தெளிவாகவும், தொடர்ச்சியாகவும், நேர்த்தியாகவும் எழுதுவார்.<br>▪ கேட்டுக் கிரகித்து இலக்கண வழுவின்றி விருப்பை ஏற்படுத்தும் வகையில் எழுதுவார்.<br>▪ உணர்வைத் தூண்டும் வகையில் பண்புடன் எழுதுவார். | 02 | உறவு முறைக் கடிதம்<br>உறவு முறைக் கடித தளக்கோளம்<br>செயற்பாட்டு பத்திரம் | | | | |
| 13.0 : மொழியின் இலக்கணத்தை அறிந்து, அதற்கமைய மொழியைச் செம்மையாகக் கையாள்வார். | 13.3 : சொற்றொடர்கள் வாக்கியம் என்பவற்றின் வகையையும் அவற்றின் இயல்பையும் அறிந்து, பிரயோகிப்பார். | வேற்றுமை 7,8 | ▪ வேற்றுமை பற்றிய முன்னறிவை மீட்டி ஏழாம், எட்டாம் வேற்றுமைகளில் இடம்பெறும் உருபு, பொருள் பற்றிக் கூறுவார்.<br>▪ வேற்றுமையை வரைவிலக்கணப்-படுத்திக் கூறுவார்.<br>▪ வேற்றமை உருபுகள் பொருளை வேறுபடுத்தும் விதத்தினை அறிந்து கூறுவார்.<br>▪ வேற்றுமை உருபுகளையும் பொருள்களையும் எழுதிக் காட்டுவார். | 04 | வேற்றமை உருபுகள் அடங்கிய சொல் அட்டைகள்<br>வேற்றமை உருபு, பொருள் சேர்ந்த விளக்க அட்டவணை | | | | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 9.0 : வாசித்துக் கிரகித்தவற்றைத் தெளிவாக எழுதுவார். | 9.1 : வாசித்த விடயம் தொடர்பான கருத்துக்களை உள்வாங்கி எழுதுவார். | கட்டுரை<br>'வான் குருவியின் கூடு' | ▪ பாடத்தை கவனமாக வாசித்து பிரதான கருத்து துணைக் கருத்துக்களைக் கூறுவார்.<br>▪ தாம் வாசித்த விடயத்தினை விரித்தும் சுருக்கியும் எழுதுவார்.<br>▪ வாசித்து நயந்ததை அனுசரித்து இரசனைகளை வெளிப்படுத்தி எழுதுவார்.<br>▪ படைப்பினுடைய சிறப்பினை வெளிப்படுத்தி எழுதுவார்.<br>▪ கட்டுரை மூலம் பெற்றுக் கொள்ளப்படும் விழுமியத்தை விளக்கி எழுதுவார். | 02 | தூக்கணாங் குருவிக் கூட்டுப் படம் | "எல்லார்க்-கும் ஒவ்வொன்-று எளிது" என்ற கருப்பொருளில் அமையும் சிறுகதை ஒன்றை எழுதுவார். | | | |